தலைமையிலே குழுவைக் கூட்டி, ஆசிரியர் தேர்வு வாரியம், தேர்வாணையம் இந்த இரண்டு இடங்களிலேயும் மாற்றுத் திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்ட பணியிடங்களை ஊர்ஜிதப்படுத்துவதற்காக அவர்களுக்கு வேண்டிய அனைத்துச் சலுகைகளும் தரப்பட வேண்டும், காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதிலே தகுதியுடையவர்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும், தகுதியில்லாதிருக்கிறபோது காலதாமதமாகும். அவர்கள் தேர்வு எழுத வேண்டும். கடந்த ஆண்டிலேகூட பார்வையற்றவர்கள் போராட்டம் நடத்தினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனிதநேயத்தோடு துறையினுடைய செயலாளர்கள் அனைவரையும் அழைத்து கூட்டம் நடத்தி, அந்தக் கூட்டத்திலே அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கிறார்கள். தேர்விலே மதிப்பெண் பெற்றவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பிலே முன்னுரிமை தர வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆக, வேலைவாய்ப்பிலே 3 சதவிகித இட ஒதுக்கீட்டை கட்டாயமாக மாற்றுத் திறனாளிகளைக் கொண்டு நிரப்புவதில் தீவிரமாக இருக்கக்கூடியவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய கோரிக்கையை வைத்துக் கொண்டு தயவுசெய்து தே.மு.தி.க. உறுப்பினர்கள் அரசியல் செய்ய வேண்டாம் என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 395, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

395—

கூட்டுறவுக் கடன் சங்கம்

***38397—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, குணராமநல்லூர் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதியிலுள்ள குணராமநல்லூர் ஊராட்சி, திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் விவகார எல்லையிலுள்ள ஒரு வருவாய்க் கிராமமாகும். புதிதாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தைத் தொடங்க வேண்டுமெனில், அதன் விவகார எல்லையில் குறைந்தபட்சம் 2,000 ஹெக்டேர் சாகுபடி நிலப்பரப்பு இருக்க வேண்டும் என்பது அரசின் விதி. ஆனால், குணராமநல்லூர் ஊராட்சியின் மொத்த நிலப்பரப்பு 922.40 ஹெக்டேர்தான். இதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பின் அளவு 553.20 ஹெக்டேர் மட்டுமே. எனவே, மேற்படி அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், குணராமநல்லூர் ஊராட்சிக்கு என புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் துவக்குவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. இருப்பினும், தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், குணராமநல்லூர் ஊராட்சியில் உள்ள மக்கள் விவசாயத்தையே நம்பி உள்ளனர். இந்த ஊராட்சியில் மேலமெஞ்ஞானபுரம், கடப்பாகத்தி, குபேரபட்டணம். வேட்டைக்காரன்குளம், கட்டுகுத்தகைப்பச்சேரி, திரிகூடபுரம், புல்லுக்காட்டுவலசை, கண்டமங்கலம், புளிச்சகுளம், முப்புலியூர்,*

2014 ஆகஸ்ட் 11]

அருந்ததியர்புரம், ராமலிங்கபுரம் மற்றும் காந்திபுரம் ஆகிய கிராமங்கள் உள்ளடங்கி உள்ளன. எனவே, இந்தப் பகுதியிலுள்ள விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எதிர்வரும் காலத்தில் கனிவான சூழ்நிலை வரும் வேளையில், இங்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 29–11–1924–ல் தொடங்கப்பட்டது. இந்தச் சங்கம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வந்தது. சமீபகாலமாகத்தான் இலாபத்தில் இயங்கி வருகிறது.* Cumulative loss*–ல் இருந்து சமீபத்தில்தான் இலாபத்திற்கு வந்திருக்கிறது. கல்லூரணி, குணராமநல்லூர், நாடாகண்ணுப்பட்டி ஆகிய கிராமங்களை உள்ளடக்கி இந்தச் சங்கம் இயங்கி வருகிறது. இச்சங்கத்தின் மொத்த நிலப்பரப்பானது 2,239.71 ஹெக்டேர்தான். குணராமநல்லூர் 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. குணராமநல்லூரில் இருக்கிற மக்களுடைய எண்ணிக்கை 11,726. ஆனால், சங்கத்தில் 390 பேர்தான் உறுப்பினராக இருக்கிறார்கள்.*

அதுமட்டுமல்ல, குணராமநல்லூரில் மொத்த விவசாய நிலமே 553.20 ஹெக்டேர்தான். ஆனால், குறைந்தபட்சம் 2,000 ஹெக்டேர் இருக்க வேண்டும். மேலும், வருடத்திற்கு 2 கோடி ரூபாய் அளவிற்கு வணிகம் செய்யக்கூடிய சங்கமாக இருக்க வேண்டும். அப்போதுதான் 5 இலட்சம் ரூபாய்க்கு வருவாய் கிடைக்கும், நிருவாகத்திற்கும் சிறப்பாக இருக்கும். இதுபோன்ற சூழ்நிலையில், அந்தச் சங்கத்திலே மொத்த மக்கள்தொகையில் 60 விழுக்காடு உறுப்பினராக இருக்க வேண்டும். பயிர்க் கடன் மட்டுமல்லாமல், வேறு கடன்களும் பெறக்கூடிய வகையில் உறுப்பினர்கள் இருக்க வேண்டும். அதனால்தான் குணராமநல்லூரில் சங்கம் அமைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

[2014 ஆகஸ்ட் 11

முற்பகல் 10—55

கூடுதல் தகவல் சொல்ல வேண்டுமானால், சென்ற ஆண்டில் 49 பேர்தான் கடன் வாங்கி இருக்கிறார்கள். பயிர்க் கடன் 14 பேர்தான் வாங்கி இருக்கிறார்கள், நகைக் கடன் மீதி 35 பேர் வாங்கி இருக்கிறார்கள். ஆக, அதிகம் பேர் கடன் வாங்க வரவில்லை. அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது இப்பொழுதுதான் இலாபத்திற்கு வந்திருக்கிறது. பொதுவாகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கூட்டுறவுத் தன்மையைத்தான் விரும்புவார், கூட்டுறவாக இருப்பதைத்தான் விரும்புவீர்கள், கூட்டுறவு symbol–ஐப் பார்த்தீர்களென்றால், இரண்டு கைகள் இணைந்த மாதிரி இருக்கும். அதுதான் கூட்டுறவின் தத்துவம். நீங்களே அந்தத் தத்துவத்திற்கு இலக்கணமாக இருக்கக்கூடியவர். கூட்டுறவிலிருந்து விலகிப்போனவர்களுக்கு என்ன பாதிப்பு நடந்தது கடந்த தேர்தலிலே? அம்மா அவர்களிடமிருந்து விலகிப் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் மேலும் சொல்ல விரும்பவில்லை, எல்லாம் தெரிந்தவர். எனவே, குணராமநல்லூரில் எதிர்காலத்திலும் கூட்டுறவுச் கடன் சங்கம் அமைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மனோகரன் அவர்கள்.*

திரு. க. மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி, முக்கடல் சூழ்ந்த பாரதத்தின் மூன்றாம் பெரும் இயக்கமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை நிலைநிறுத்திய கம்பீரத் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) அகிலம் போற்றும் மாதரசி, வல்லமை மிக்க அம்மா, வேலு நாச்சியார் போல வாழும் நாச்சியார், வாயாரப் போற்றிப் புகழ்கிற வரலாற்றுத் திட்டங்களால் ஆச்சரியங்களைப் பூச்சொரிய வைத்திடும் அம்மாவின் சட்டசபை, ஒப்பில்லா வகையில் உச்சங்களைத் தொட்ட சபை, சாதனைத் தாயின் சட்டமன்ற வரலாறு, 25 வருட வெள்ளி விழா வீறுநடை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் 30 அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள்.*

2014 ஆகஸ்ட் 11]

(மணியடிக்கப்பெற்றது) தலைவர் அவர்களே, நன்றி சொல்லி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. க. மனோகரன்: *திருப்போரூர் தொகுதி, தண்டரையில் பல ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு நல்கிடும் வகையில், 43 ஏக்கர் பரப்பளவில் நடப்பாண்டில் சிட்கோ தொழிற்பேட்டை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியைக் கேளுங்கள் என்றால், நீங்கள் படித்துக்கொண்டிருக்கிறீர்களே?*

திரு. க. மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் ஒன்றியத்தில், நெம்மேலி ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வேண்டுமானால், அரசாணை எண் 376–ன்படி, ஒரு சங்கத்தின் விவகார எல்லையில் குறைந்தபட்சம் 2 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பு அல்லது 4,950 ஏக்கர், பயிரிடக்கூடிய நிலப்பரப்பாக இருக்க வேண்டும். மொத்த உறுப்பினர்களில் குறைந்தபட்சம் 60 விழுக்காடு, கடன் பெறும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சங்கம் அமைக்க முடியுமா, முடியாதா என்பதை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *இந்த விதிகள்படி இல்லை என்றால் முடியாது. விதிகளின்படி அந்தச் சங்கத்தில் 2 ஆயிரம் ஹெக்டேர் நிலம் இருப்பதோடு, பயிரிடக்கூடிய நிலப்பரப்பாகவும் இருக்க வேண்டும். மேலும், உறுப்பினர்கள் 60 விழுக்காடு பயிர்க் கடன் மட்டுமல்லாமல், அனைத்துக் கடன்களும் பெறுபவர்களாக இருக்க வேண்டும். ஆண்டுக்கு 2 கோடி ரூபாய் கடன்*

வழங்கக்கூடிய திறனும் இருக்க வேண்டும், அதேநேரத்திலே 5 இலட்சம் ரூபாய் வருவாய் கிடைக்க வாய்ப்பு இருந்தால், சங்கம் தொடங்கப்படும். அந்த விவகார எல்லையில் அதுபோன்ற வாய்ப்பு இல்லை என்றால், சங்கம் தொடங்க முடியாது என்பது கூட்டுறவு விதி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 396, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

396—

உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை

***35008—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. தொழில் முனைவோர் தகுந்த தொழில் முதலீட்டோடு முன்வருவார்கள் என்றால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிசீலித்து, தொழில் தொடங்குவதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*